11 OCT
EASTERN UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2014)

## EDUS 4203 கலைத்திட்டக் கொள்கைகளும் செயன்முறையும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. (அ) கலைத்திட்டம் பற்றிக் கல்வியியலாளர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் அது பற்றிய உமது விளக்கத்தை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு கலைத்திட்டத்தின் உருவ அமைப்பாக்கம், வடிவமைப்பு பற்றி றிப்பு (1994) என்பவர் கூறிய கலைத்திட்டப் பண்புகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) கலைத்திட்டத்தை எண்ணக்கரு என்னும் நோக்கில் அணுகி எயிஸ்னர் வல்லன்ஸ் (1974) ஆகியோர் கூறிய பண்புகளை எடுத்துரைக்க.

(05 புள்ளிகள்)

02.(அ) “ஒரு நாட்டின் தேசிய இலக்கு அடையப்பட வேண்டுமாயின் அது கலைத்திட்டத்தின் இலக்கினூடாக பாடசாலையின் வகுப்பறைச் செயற்பாட்டின் குறிக்கோள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.” இக்கூற்று தற்போதைய இரண்டாம் நிலை பாடசாலையின் வகுப்பறைச் செயற்பாட்டில் எவ்வளவுதூரம் ஒழுங்கமைக்கப்படுகின்றதென்பதை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) “ஒரு பாடசாலையின் இலக்கு அடையப்பட வேண்டுமாயின் கலைத்திட்டச் செயற்பாடுகள் வகுப்பறைச் செயற்பாட்டினூடாக ஆசிரியரினால் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.” இக்கூற்று இரண்டாம் நிலை பாடசாலையின் வகுப்பறைச் சொற்பாட்டில் எவ்வளவு வினைத்திறனுடையதாக இருக்கின்றதென்பதை உமது அனுபவத்தின் அடிப்படையில் கருத்துக்களை முன்னெடுக்குக.

(10 புள்ளிகள்)

03.(அ) கலைத்திட்டம் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய நான்கு மூலாதாரங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒருங்கிணைந்த பாடக்கலைத்திட்டமானது இரண்டாம் நிலைக் கல்விச் செயற்பாட்டில் நடைமுறையில் காணப்படுகின்றது. இக்கலைத்திட்டத்தை ஆசிரியர் தயாரிக்கையில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களை எடுத்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) கலைத்திட்டமொன்றைத் தயாரிக்கும்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகளை முன்வைக்குக.

(05 புள்ளிகள்)

04.(அ) D.K.வீலரின் (1967) கலைத்திட்ட மாதிரியின் சிறப்பம்சங்களை எடுத்துக்கூறி, ரல்ப் டெயிலரின் கலைத்திட்ட மாதிரியில் இருந்து இது எவ்வாறு வேறுபடுகின்றதென்பதை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) கலைத்திட்ட அபிவிருத்தி என்றால் என்ன? இது எவ்வாறு கட்டியெழுப்பப்படுகின்றதென்பதைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

05.(அ) 1AB பாடசாலையொன்றில் கலைத்திட்ட அமுலாக்கம் எவ்வறு செயற்படுத்தப்படுகின்றதென்பதை அதன் கட்டமைப்பை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) கலைத்திட்ட அமுலாக்கலின் பாடத்தலைவரின் பொறுப்புக்களை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) கலைத்திட்ட அமுலாக்கலின் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி சுருக்கமாக ஆராய்க.

(05 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு சுருக்கமாக விளக்கம் தருக.

(அ) மறை கலைத்திட்டத்தினால் மாணவன் பெறும் பயன்கள்.

(ஆ) இலங்கை பாடவிதானத்தில் 1997/98 இல் ஏற்பட்ட கலைத்திட்ட மாற்றங்களும் முக்கியத்துவமும்.

(இ) ரல்ப் ரெயிலரின் கலைத்திட்ட மாதிரியின் முக்கிய குறைபாடுகள்.

(ஈ) புளுமின் கலைத்திட்ட நோக்கம் பற்றிய பகுப்பாய்வு

(உ) பாடவிதான அபிவிருத்திக்கு நிர்வாகம் வழங்க வேண்டிய கடமைகள்

(5x5=25 புள்ளிகள்)

*****